<u>சாதாரணக்கூட்டம்</u>

வெள்ளகோவில் நகராட்சியின் சாதாரணக்கூட்டம் 2024-ம் ஆண்டு குரோதி வருடம் செப்டம்பர் மாதம் **30.09.2024–ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு** நகர்மன்றத் தலைவர் தலைமையில் நடைபெற்று கீழ்காணும் பொருள்கள் குறித்து முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**<u>தீர்மானம் எண் : 273 / 2024</u>**

ஆணையர் அவர்களின் ஜீலை மற்றும் ஆகஸ்ட் 2024–ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் பதிவு செய்யலாம்.

(கோப்பு எண். 2589 / 2023 / சி1)

**<u>தீர்மானம் – பதிவு செய்யப்பட்டது.</u>**

**<u>தீர்மானம் எண் : 274 / 2024</u>**

நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜீலை மற்றும் ஆகஸ்ட் 2024–ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் பதிவு செய்யலாம்.

(கோப்பு எண். 2589 / 2023 / சி1)

**<u>தீர்மானம் – பதிவு செய்யப்பட்டது.</u>**

**<u>தீர்மானம் எண் : 275 / 2024</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் இட்லி STEAM BOILER கடந்த 04.09.2023 முதல் பழுதாகி சரிசெய்ய முடியாத சூழ்நிலையில் உள்ளது. எனவே, நாளொன்றுக்கு 1200 இட்லி சமைக்க வேண்டியுள்ளதால், 04.09.2023 முதல் வாடகைப்பாத்திரம் மூலம் இட்லி சமைக்கப்பட்டு வந்தது.

மேற்படி 100 குழிகள் 25.5 கி எடை கொண்ட (ஈய) இட்லி பானை கொள்முதல் செய்ய அவசர அவசியம் கருதி 06.05.2024ல் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்த காரணத்தால் உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில், குறைவான விலைப்புள்ளி ரூ.11,220/– தெரிவித்த, உதயம் கல்யாண ஸ்டோர்ஸ், வெள்ளகோவில் என்பவருக்கு விநியோக உத்திரவு வழங்கி செலவினம் மேற்கொண்டதையும், மேற்படி 04.09.2023 முதல் 10.05.2024 வரை நாளொன்றுக்கு வாடகை ரூ.56/– வீதம் 250 நாட்களுக்கு மொத்தம் ரூ.14,000/- செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1474 / 2022 / அ3)**

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>தீர்மானம் எண் : 276 / 2024</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை வளாகத்தில் கலைஞர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வாரச்சந்தை மேம்பாட்டு பணிகள் நடைபெறுவதைத் தொடர்ந்து பொதுமக்களின் நலனுக்காக நகரின் மையப்பகுதியான ஒழுங்குமுறை

விற்பனைக்கூட வளாகத்தில் கடந்த 19.06.2022 தேதி முதல் தற்காலிகமாக வாரச்சந்தை செயல்பட்டு வருகிறது.

மேற்படி வாரச்சந்தை வசூல் பணியினை நகராட்சி பணியாளர்கள் கூடுதலாக கவனித்து வந்த நிலையில் குத்தகைதாரரர்கள் மூலம் வசூல் செய்ய ஒப்பந்தப்புள்ளி / ஏலம் கோரப்பட்டதில் 30.06.2022ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த திரு. ஜி. கார்த்திகேயன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றது ஆட்சேபனை தெரிவித்து சென்னை உயர்நீதி மன்றத்தில் தலைவர், திருப்பூர் தியாகி குமரன் வாரச்சந்தை நலச்சங்கம் சார்பாக வழக்கு (எண். W.P.18441/2024) தொடரப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருப்பூர், மாவட்ட வருவாய் அலுவலர் திருப்பூர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர், வட்டாட்சியர் காங்கேயம், நகராட்சி ஆணையாளர், வெள்ளகோவில் நகராட்சி மற்றும் ஜி. கார்த்திகேயன், வெள்ளகோவில் ஆகியோரை எதிர்வாதியாக சேர்க்கப்பட்டு வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி வழக்கு சார்பாக வாதிட சென்னை உயர்நீதி மன்ற கூடுதல் வழக்கறிஞர் திரு. பி. குருநாதன் அவர்களின் கடித நாள். 15.07.2024ல் மேற்படி வழக்கில் மேற்கண்ட 6 எதிர் மனுதாரர் சார்பாக வாதிட வழக்கின் விவரங்களை அனுப்பி வைக்கக்கோரி கடிதம் வரப்பெற்றது. மேற்படி கடிதத்தின் பேரில் இவ்வழக்கிற்கு சென்னை உயர்நீதி மன்ற கூடுதல் வழக்கறிஞர் திரு. பி. குருநாதன் அவர்களை நியமனம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கும் வழக்கிற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.30,000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1385/2024/அ3)**

<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.</u>

**<u>தீர்மானம் எண் : 277 / 2024</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை வளாகத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சந்தை மேம்பாட்டு பணிகள் நடைபெற்றதில் முதல் கட்டமாக 147 வாரச்சந்தை கடைகளும், இரண்டாம் கட்டமாக 84 வாரச்சந்தை கடைகளும் (8X8 அளவில்) கட்டப்பட்டது.

இந்நிலையில் வாரச்சந்தையில் சுங்கம் வசூலிக்கும் கட்டணம் கடந்த 13 ஆண்டுகளுக்கு முன்பாக 2009–ல் நிர்ணயம் செய்யப்பட்டது. எனவே, வாரச்சந்தை சுங்கம் வசூலிக்க கட்டணம் மறு நிர்ணயம் செய்ய மன்ற தீர்மான எண். 04/2024 நாள். 18.01.2024–ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிர்ணயம் செய்யப்பட்ட வாரச்சந்தை சுங்க கட்டணம் தொடர்பாக பொது மக்கள், தங்களின் ஆட்சேபனை இருப்பின் 30 நாட்களுக்குள் தெரிவிக்க கோரி தினசரி நாளிதழ்களில், பிற்பகல் நாளிதழ், கோவை பதிப்பு நாள். 25.06.2024 மற்றும் தமிழ் சுடர் நாளிதழ், திருப்பூர் பதிப்பு நாள். 25.06.2024–ல் வெளியிடப்பட்டது. மேலும், நகராட்சிக்குட்பட்ட அரசு அலுவலகங்களின் விளம்பரப்பலகையில் இவ்வலுவலக கடித ந.க.எண். 64/2023/அ3, நாள். 21.06.2024 மூலம் பார்வைக்கு வைக்கப்பட்டும், **30** நாட்களுக்கு மேலாக நாளது தேதி வரை ஆட்சேபனை ஏதும் பெறப்படவில்லை.

எனவே, தீர்மான எண். 04/2024, நாள். 18.01.2024–ல் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் உறுதி செய்யப்படுகிறது. இந்த சுங்க கட்டணத்தை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான விளம்பர கட்டண செலவினத்திற்கான தொகையையும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1240/2024/அ3)**

<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.</u>

**<u>தீர்மானம் எண் : 278 / 2024</u>**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலைய கடை எண். 6 (6- வது ஏலம்) மற்றும் கடை எண். 2, 7 (28–வது ஏலம்) ஆகிய கடைகளுக்கு 14.08.2024–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் நடைபெற்றது. இதில் பேருந்து நிலைய கடை எண்.2–க்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது. மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை விபரம் பின்வருமாறு.

| வ. எண் | குத்தகை விபரம் | கலந்து கொண்டவர்கள் விபரம் | ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை (மாத வாடகை, GST இல்லாமல்) |
|---|---|---|---|
| 1 | பேருந்து நிலைய கடை எண்.2 | மு.நிவேதா, த/பெ.முருகானந்தம், 5/6,N.G.வலசு, பாப்பம்பாளையம், வெள்ளகோவில். | ரூ.11,000/- |
| 2 | | சு. ராமு, த/பெ. சுப்பிரமணியன், 57, இந்திரா நகர், மாவுடுகுறிச்சி மேற்கு, பேராவூரணி, தஞ்சாவூர் | ரூ. 10,500/- |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மு.நிவேதா, த/பெ.முருகானந்தம், என்பவரின் அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வித்தொகை மாத வாடகையாக ரூ.11,000/– தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி கடை 28 ஏலம் கோரப்பட்டும் ஏலம் போகாததாலும், முந்தைய குத்தகை தொகையான ரூ. 10200/- விட தற்போது கோரியுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை அதிகமாக உள்ளதாலும், அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்விதாரருக்கு கடையின் குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்படி கடையானது 28 ஏலம் கோரியும் ஏலம் போகாததாலும், தற்போதைய உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி கேள்வித் தொகை முந்தைய ஆண்டின் குத்தகை தொகையை விட அதிகமாக உள்ளதாலும், அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியவருக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 872 / 2024 / அ3)**

<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.</u>

**<u>தீர்மானம் எண் : 279 / 2024</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலைய இருசக்கர வாகன நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூல் செய்ய திருப்பூர் மாவட்ட அரசிதழ் எண்.8, நாள். 27.11.2018ன் படி சைக்கிள் ஒன்றுக்கு ரூ.5/–ம், மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு ரூ.8/–ம் (24 மணி நேரத்திற்கு) என நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி கட்டணம் 6 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் ஆகும். தற்பொழுது அருகில் உள்ள இருசக்கர வாகன நிறுத்தும் இடங்களில் மேற்படி கட்டணம் நாள் ஒன்றுக்கு ரூ.15/- முதல் வசூலிக்கப்படுகிறது.

எனவே நகராட்சியின் வருவாய் பெருக்கும் நோக்குடன் மேற்படி கட்டணத்தை சைக்கிள் ஒன்றுக்கு ரூ.10/—ம், மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு ரூ.12/—ம் (24 மணி நேரத்திற்கு) நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்ய ஆட்சேபனை / ஆலோசனை கோரி பத்திரிக்கையில் விளம்பரம் செய்யவும். இதற்காக ஆகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1205 / 2024 / அ3)**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் எண் : 280 / 2024**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலைய இருசக்கர வாகன நிறுத்துமிடத்திற்கான குத்தகை உரிமம் கடந்த 01.12.2021 முதல் 30.11.2024 முடிய மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. இந்நிலையில் குத்தகை உரிம காலம் எதிர்வரும் 30.11.2024 உடன் முடிவடைய உள்ளதால், பேருந்து நிலைய இருசக்கர வாகன நிறுத்துமிடத்திற்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், இது தொடர்பாக தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும், இதற்காக ஆகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1240 / 2024 / அ3)**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் எண் : 281 / 2024**

நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 19245 / 2013 / ஆர்—1, நாள். 07.05.2024ன் படி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 2022, பிரிவு 87, உட்பிரிவுகள் (a) முதல் (e) வரை மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023, விதி எண். 267 (1), (2) மற்றும் (3)ல் சொத்து வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ள இனங்கள் மற்றும் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து விவரிக்கப்பட்டுள்ளது.

சொத்துவரி விலக்களிக்கப்பட்டுள்ள கட்டடங்களில், வழிபாட்டுத்தலங்கள், சுயநிதி கல்வி நிறுவனங்கள் தவிர்த்து மத்திய அல்லது மாநில அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களின் மாணவர் தங்கும் விடுதிகள் உட்பட கட்டடங்கள், ஆதரவற்றோர் மற்றும் முதியோர் பாதுகாப்பிற்காக பயன்படுத்தப்படும் காப்பகங்கள், குடியிருப்பு இல்லாமல் தொண்டு நோக்கத்துடன் செயல்படும் மருத்துவமனைகள் மற்றும் வரலாற்று சிறப்பு மிக்க புரதான நினைவுச் சின்னங்கள் உள்ளிட்ட இனங்கள் இவ்வகைப்பாட்டில் அமைந்துள்ளன.

எனவே, வெள்ளகோவில் நகரட்சியின் 1 முதல் 27 வார்டுகளில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான கடைகள், அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் கோயில்கள் தற்போது Assessment Dash Board -ன் படி வரிவிளக்களிக்கப்பட்ட 17 எண்ணிக்கையிலான சொத்துவரி இனங்கள் ஆகும். இதனை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| S. No. | Ward Name | Street Name | Assesment Number | Old Assesment Number | Name |
|---|---|---|---|---|---|
| 1 | WARD NO 01 | UPPUPALAYAM WEST 1ST STREET | 159/001/900927 | 159/001/00865 | HEAD MASTER UNION PRIMARY SCHOOL |

| S. No. | Ward Name | Street Name | Assesment Number | Old Assesment Number | Name |
|---|---|---|---|---|---|
| 2 | WARD NO 01 | UPPUPALAYAM WEST 1ST STREET | 159/001/900928 | 159/001/00866 | PRESIDENT ARANKAVALAR KULU KAMATCHIYAMMANKOVIL |
| 3 | WARD NO 02 | KUMARAVALASU | 159/002/900994 | 159/002/01034 | CHAIRMAN VELLAKOVIL SIRAYYAPPA SEVA SANGA TRUST |
| 4 | WARD NO 07 | NATESAN NAGAR | 159/007/900787 | 159/009/00850 | GOVT GIRLS HOSTEL BC |
| 5 | WARD NO 07 | NATESAN NAGAR | 159/007/900853 | 159/009/00924 | HEAD MASTER GOVERMENT HIGH SEC SCHOOL |
| 6 | WARD NO 07 | NATESAN NAGAR | 159/007/900854 | 159/009/00925 | HEAD MASTER GOVERNMENT HIGH SEC SCHOOL |
| 7 | WARD NO 08 | SORIYANKINATH UPALAYAM WEST | 159/008/900918 | 159/011/00811 | ADMINISTRATOR SARVALAIYAM TRUST |
| 8 | WARD NO 08 | SORIYANKINATH UPALAYAM WEST | 159/008/900919 | 159/011/00812 | ADMINISTRATOR SARVALAIYAM TRUST |
| 9 | WARD NO 09 | SEMMANDEMPA LAYAM | 159/009/901052 | 159/011/00817 | PARENTS TEACHERS SANGAM PRIMARY SCHOOL |
| 10 | WARD NO 11 | VEERAKUMAR NAGAR 2ND STREET | 159/011/900898 | 159/006/01501 | HEAD MASTER MIDDLE SCHOOL WEST |
| 11 | WARD NO 12 | M PALANISAMY NAGAR 2ND STREET | 159/012/901080 | 159/004/01700 | ASSISTANT VETERINARY DOCTOR VETERINARY HOSPITAL |
| 12 | WARD NO 15 | LKC NAGAR | 159/015/901185 | 159/020/01569 | AEE PUBLIC WORK DEPARTMENT |
| 13 | WARD NO 15 | LKC NAGAR | 159/015/901186 | 159/020/01570 | HEAD MASTER MIDDLE SCHOOL |
| 14 | WARD NO 15 | LKC NAGAR | 159/015/901206 | 159/020/01609 | PUTRUKKAN SRI ANANDA VINAYAKAR TRUST |
| 15 | WARD NO 16 | KPC NAGAR | 159/016/901007 | 159/019/00717 | HEAD MASTER PUNITHA AMALA ANNAI GIRLS HIGH SCHOOL |
| 16 | WARD NO 16 | KPC NAGAR | 159/016/901008 | 159/019/00718 | SUPERIOR AMALA ANNAI CONVENT |
| 17 | WARD NO 21 | KARATTUPALAYAM SOUTH | 159/021/900967 | | BLOCK MEDICAL OFFICER |

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(ந.க.எண். 1474 / 2022 / அ3)**

**<u>தீர்மானம் – பதிவு செய்யப்பட்டது.</u>**

**<u>தீர்மானம் எண் : 282 / 2024</u>**

வெள்ளகோவில் நகராட்சியின் அலுவலகப்பயன்பாட்டிற்கு கணினி அறையில் பயன்படுத்தப்பட்டு வரும் தற்போதைய கணினியானது பத்து இலட்சத்திற்கும் அதிகமான கோப்புகள் பதியப்பட்டுள்ளதாலும், கணினி தொடர்பான புதிய திட்டங்களுக்கு புதிய மென்பொருட்கள் Install செய்ய Latest Version Computer (Core 17, 16GB Ram/2TB) தேவைப்படுவதாலும், புதிய கணினி கொள்முதல் செய்ய தோராயமாக ரூ.1,75,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டியும், ஏற்கனவே கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு வரும் Syscon Systems, Pollachi அவர்களிடம் கொள்முதல் செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 796 / 2024 / அ1)**

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>தீர்மானம் எண் : 283 / 2024</u>**

வெள்ளகோவில் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டிட / திட்ட அனுமதி கோரி பெறப்படும் விண்ணப்பங்களுக்கு கட்டிட உரிமையாளரின் சுயசான்றின் அடிப்படையில் 2500 சதுரடி வரை பரப்பளவுள்ள மனையில் 3500 சதுரடி வரையிலான தரைத்தளம் அல்லது தரைத்தளத்துடன் கூடிய முதல் தளங்களுக்கு இரண்டு குடியிருப்புக் கட்டிடங்கள் கட்ட இணையவழி (Single Window Portal) கட்டட அனுமதி வழங்குவதற்கு செலுத்த வேண்டிய ஒருங்கிணைந்த கட்டணங்களை நிர்ணயம் செய்து வரப்பெற்ற (அரசாணை நிலை) எண். 94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை நாள். 18.07.2024 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் பதிவு செய்யலாம்

**(கோப்பு எண். 1481/2024/எப்1)**

**<u>தீர்மானம் – பதிவு செய்யப்பட்டது.</u>**

**<u>தீர்மானம் எண் : 284 / 2024</u>**

வெள்ளகோவில் நகராட்சி உப்புப்பாளையம் என்ற முகவரியில் வசிக்கும் திரு. V. குமாரசாமி, த/பெ. வைத்தியகவுண்டர், திரு. S. வீரக்குமார் த/பெ. சுவாமிநாதன் மற்றும் திரு. S. கிரிதரபிரபு, த/பெ. சுவாமிநாதன், 405, குமரன் அப்பார்ட்மெண்ட், காங்கேயம் டவுன், திருப்பூர் ஆகியோர்கள் வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட உப்புப்பாளையம் ரோடுக்கு வடக்கே வார்டு எண். 1, சர்வே.எண். 306/A1, 306/A2, 295/1R–ல் மேல்புறமும், கீழ்புறமும் தென்வடலில் 530 அடி நீளம், வடபுறமும், தென்புறமும் கிழமேலில் **30** அடி அகலம் இதற்கு 0.36 1/2 ஏக்கர் கொண்ட 30 அடி அகலமுள்ள தென்வடல் தடம் கொண்ட இடத்தை உப்புப்பாளையம் மெயின் ரோடுடன் இணைத்து பொதுமக்கள் சாலையாக பயன்படுத்தி கொள்ள விண்ணப்பித்துள்ளார்கள்.

மேற்குறிப்பிட்ட இடத்திற்கு சாலை அமைத்து சாலைக்கான தரச்சான்று எண். KEC/CER/2024-25/HE/32 நாள். 27.08.2024–ல் பெறப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளர் குறிப்பு வழங்கியுள்ளார். அத்துடன் குடிநீர்குழாய் விஸ்திரிப்பு மற்றும் மழைநீர் வடிகால் ஆகிய வசதிகள் அமைக்க உரிய கட்டணம் ரூ. 400000/-ஐ சலான் எண். 159/01/01/24-25/0008269, நாள். 24.07.2024–ல் பெறப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளர் சான்று வழங்கியுள்ளாார். எனவே இச்சாலையை நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 3464/2023/எப்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் எண் : 285 / 2024**

வெள்ளகோவில் நகராட்சியில் பணிபுரிந்து வரும் நிரந்தர தூய்மை பணியாளர்கள், துப்புரவு பணிமேற்பார்வையாளர்கள், ஓட்டுநர்கள், பேருந்து நிலைய காவலர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகியோருக்கு தீபாவளிப்பண்டிகை முன்னிட்டு **2024 – 2025** ம் ஆண்டிற்கு சீருடை துணிகள் வாங்கி வழங்கவும், காலணிகள் மற்றும் தையல்கூலிக்கு அரசு நிர்ணயித்துள்ள தொகையை வழங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. **2.00 /–** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பணியாளர்களுக்கு சீருடைத்துணிகள் அரசு நிறுவனமாக கோ – ஆப் டெக்ஸ் நிறுவனத்திற்கு விநியோக உத்திரவு வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1857 /2024/எச்1)**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் எண் : 286 / 2024**

வெள்ளகோவில் நகராட்சியில் வார்டு எண் **1** முதல் **21** முடிய உள்ள பகுதிகளில் தெரு நாய்கள் வீதிகளில் அனாதையாக சுற்றி திரிவதனுடன் வாகனங்களில் செல்வோர்களையும் பள்ளிக்கு செல்லும் மாணவ, மாணவிகளையும், குழந்தைகளையும் மற்றும் பொதுமக்களையும் கடித்தும் வாகன விபத்துகள் ஏற்படுத்தி வருவதாக பொது மக்களிடமிருந்து அடிக்கடி புகார் வந்தவண்ணம் உள்ளது.

எனவே, தெரு நாய்களின் இனப்பெருக்கத்தினை கட்டுபடுத்தும் வகையில் விலங்குகள் நலவாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட திருவாளர். தங்கம் மெமோரியல் டிரஸ்ட், வீரபாண்டி, திருப்பூர் எனும் நிறுவனத்தின் மூலம் தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநாய்கடி தடுப்பூசி போடவும் மேலும் இந்திய விலங்குகள் நலவாரியத்தின் கடிதம் F.No. 24-02/2020-21/ABC நாள். 05.04.2022 -ன் படி நாய்களுக்கு கருத்தடை செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட தொகை நாய் ஒன்றுக்கு ரூ.1650/- வீதம் வழங்கவேண்டியுள்ளது, எனவே வார்டு எண் **01** முதல் **21** முடிய மேற்கொள்ளப்படும் கணக்கெடுப்பின் படி பிடிக்கப்படும் தெரு நாய்கள் ஒவ்வொன்றுக்கும் மேற்கண்ட தொகை வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 2437/2023/எச்1)**

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>தீர்மானம் எண் : 287 / 2024</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில்

1. அம்மன்கோவில் வீதி,
2. கரூர் ரோடு,
3. முத்தூர் ரோடு பிரிவு,
4. டி.சி.மெயின்ரோடு,
5. சொரியங்கிணத்துப்பாளையம் காலனி,
6. மூலனூர் ரோடு,
7. மடாமேடு பிரிவு,
8. பூஸ்டர், கேபிசி நகர்,
9. கான்வென்ட் ரோடு (மாதா சிலை அருகில்)

மேற்படி பகுதிகளில் குடிநீர் விநியோகத்தின் பொழுது குடிநீர் பகிர்மானக்குழாய்கள் அதிக அழுத்தம் மற்றும் போக்குவரத்தினால் உடைந்து பழுதுகள் ஏற்படுகிறது. எனவே உடனடியாக சரிசெய்யவும், மேலும் மேற்படி பணியானது பொதுமக்களின் தினசரி குடிநீர் தேவை பணியாக இருப்பதாலும், அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு ரூ.4.20 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1206 / 2024 / இ1)**

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>தீர்மானம் எண் : 288 / 2024</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10ல் உள்ள அரசு வட்டார சுகாதார அலுவலகம் (Primary Health Centre) கட்டிடம் தற்சமயம் 15–வது நிதிக்குழு (Health Grant) திட்ட நிதியின் கீழ் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. மேலும் கட்டிடத்தின் முன்புறம் Paver Block உட்புற அறைகளுக்கு இடையே தடுப்பு சுவர் மற்றும் Cubboard ஆகிய பணிகள் மேற்கொள்ள ரூ.1.45 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1206 / 2024 / இ1)**

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>தீர்மானம் எண் : 289 / 2024</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில்

1. திருவள்ளுவர் நகர் (குறிஞ்சி பள்ளி பின்புறம்),
2. முத்தூர் ரோடு (EB Office opposite),
3. வேலுச்சாமி நகர் பிரிவு,
4. திருவள்ளுவர் நகர்,

5. வள்ளியரச்சல் ரோடு,
6. ஈரோடு ரோடு பிரிவு,
7. சிவக்குமார் நகர் பிரிவு,
8. உப்புப்பாளையம் ரோடு (ராசி மஹால் அருகில்),
9. நூலகம் அருகில், டிசி மெயின் ரோடு,
10. ஜிஜி மருத்துவமனை அருகில்,
11. உப்புப்பாளையம் ரோடு காந்தி நகர் பிரிவு,
12. சீரங்கராயக்கவுண்டன் வலசு,
13. ஜெகத்குரு மில்,
14. புதுக்காடு

மேற்படி பகுதிகளில் குடிநீர் விநியோகத்தின் பொழுது குடிநீர் பகிர்மானக்குழாய்கள் அதிக அழுத்தம் மற்றும் போக்குவரத்தினால் உடைந்து பழுதுகள் ஏற்படுகிறது. எனவே உடனடியாக சரிசெய்யவும், மேலும் பணியானது பொதுமக்களின் தினசரி குடிநீர் தேவை பணியாக இருப்பதாலும், அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு ரூ.4.90 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1206 / 2024 / இ1)**

<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.</u>

**<u>தீர்மானம் எண் : 290 / 2024</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில்

1. பெரியசாமி நகர்
2. மு.பழனிச்சாமி நகர்
3. துரைராமசாமி நகர்
4. உப்புப்பாளையம் ரோடு
5. சிவக்குமார் நகர்
6. காமராஜபுரம்
7. திருச்சி கோவை ரோடு
8. முத்துக்குமார் நகர்
9. மூலனூர் ரோடு
10. கல்லுக்குட்டை மேடு
11. திருவள்ளுவர் நகர்

மேற்படி பகுதிகளில் குடிநீர் விநியோகத்தின் பொழுது குடிநீர் பகிர்மானக்குழாய்கள் அதிக அழுத்தம் மற்றும் போக்குவரத்தினால் உடைந்து பழுதுகள் ஏற்படுகிறது. எனவே உடனடியாக சரிசெய்யவும், மேலும் மேற்படி பணியானது பொதுமக்களின் தினசரி குடிநீர் தேவை பணியாக இருப்பதாலும், அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு ரூ.4.80 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1206 / 2024 / இ1)**

<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.</u>

**<u>தீர்மானம் எண் : 291 / 2024</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.02–ல் உள்ள நகராட்சி பேருந்து நிலைய வளாகத்தினுள் செயல்பட்டு வரும் அம்மா உணவகம் உட்புறம் மற்றும் வெளிப்புறங்களில் மேம்பாடு மற்றும் பராமரிப்பு பணிகள் மற்றும் உணவு சமைக்கும் சமையற்கூடத்தில் எரிவாயு மின்அடுப்புகள் பராமரிப்பு மற்றும் பழுது பணிகள் மேற்கொள்ள ரூ.3.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1206 / 2024 / இ1)**

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>தீர்மானம் எண் : 292 / 2024</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நியைத்தில் பொது மக்கள் உபயோகிக்கும் இலவச சிறுநீர் கழிப்பிடம் மற்றும் கட்டணக் கழிப்பிடம் பழுதடைந்த நிலையில் உள்ளதால் அதனை சீரமைப்பு வர்ணம் பூச ரூ.1.90 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1206 / 2024 / இ1)**

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>தீர்மானம் எண் : 293 / 2024</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 சொரியங்கிணத்துப் பாளையம் பகுதியில் திறந்த வெளிக்கிணறானது பாதுகாப்பற்று காணப்படுகிறது. இதனால் அப்பகுதி மக்களுக்கும் மற்றும் போக்குவரத்துக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் உள்ளது. எனவே திறந்த வெளிக்கிணற்றிற்கு மூடி அமைக்க ரூ.0.67 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1206 / 2024 / இ1)**

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>தீர்மானம் எண் : 294 / 2024</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8 சொரியங்கிணத்துப் பாளையம் (சர்வாலயம்) பகுதியில் பொது மக்களுக்கு பகுதியில் உள்ள ஆழ்குழாய் கிணற்றிலிருந்து அப்பகுதி மக்களுக்கு தண்ணீரானது விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் ஆழ்குழாய் கிணற்றில் போதிய அளவில் தண்ணீர் இல்லாத காரணத்தினால் கூடுதலாக Borewell ஆழப்படுத்துவதற்கு ரூ.1.20 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1206 / 2024 / இ1)**

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.</u>**

**தீர்மானம் எண் : 295 / 2024**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11–ல் ஈரோடு சாலையில் உள்ள மணியக்காரர் பேட்டை பகுதியில் உள்ள ஆழ்குழாய் கிணற்றிலிருந்து அப்பகுதி மக்களுக்கு தண்ணீரானது விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் ஆழ்குழாய் கிணற்றில் போதிய அளவில் தண்ணீர் இல்லாத காரணத்தினால் கூடுதலாக Borewell ஆழப்படுத்துவதற்கும் மற்றும் அப்பகுதியில் உள்ள சில தெருக்களில் தண்ணீர் பகிர்மானக் குழாய்கள் சில தூரத்திற்கு புதிதாக அமைப்பதற்கும் ரூ.2.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1206 / 2024 / இ1)**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் எண் : 296 / 2024**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வார்டு எண்.19 தீத்தாம்பாளையம் வார்டு எண்.20 அகலரப்பாளையம்புதூர் வார்டு எண்.21–ல் கரட்டுப்பாளையம் ஆகிய பகுதிகளில் குடிசை வாழ் மக்கள் அதிக அளவில் உள்ளனர். மேலும் அப்பகுதிகளில் வார்டு எண்.19–ல் சுமார் 410 குடியிருப்புகள் வார்டு எண்.20–ல் 580 குடியிருப்புகள் மற்றும் வார்டு எண்.21–ல் சுமார் 750 குடியிருப்புகள் ஆகியவை உள்ளன. மேற்படி பகுதிகளில் சிலவற்றில் வீட்டுக்குடிநீர் இணைப்புகள் இல்லாமல் உள்ளது. அம்ரூத் திட்டத்தின் கீழ் மேற்கண்ட அனைத்து பகுதிகளிலும் குடிநீர் பகிர்மான குழாய்கள் இல்லாத நிலை உள்ளது. எனவே அப்பகுதிகளில் புதிதாக குடிநீர் பகிர்மானக்குழாய் பதித்து குடிநீர் இணைப்பு வழங்குவது அத்தியாவசிய தேவையாக உள்ளது. மேலும் இதனால் நகராட்சிக்கு வருவாய் அதிகரிக்கும். எனவே மேற்படி பகுதிகளில் பொது மக்களின் தினசரி தேவையான குடிநீர் வழங்குவதற்கு புதியதாக குடிநீர் பகிர்மான குழாய்கள் மற்றும் புதிய வீட்டுக்குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்கு ரூ.7.30 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1206 / 2024 / இ1)**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் எண் : 297 / 2024**

நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட விபரப்படி உள்ள கணினிகள், பிரிண்டர்கள், CCTV camera, UPS and Net work switches மற்றும் Intercom ஆகியவைகள் உள்ளது.

**கணினிகள்**

| Sl. No. | Section | Staffs | Computer qty | | |
|---|---|---|---|---|---|
| | | | Desktop | Laptop | All-in-One |
| I | **General** | Chairman | 1 | - | - |
| | | Commissioner | - | - | 1 |
| | | Manager | 1 | - | - |
| | | Accountant | - | - | 1 |
| | | Assistant | 1 | - | - |
| | | Typist | 1 | - | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| II | **Engineering** | Municipal Engineer | - | - | 1 |
| | | Overseer | 1 | 1 | - |
| | | Work Inspector | 1 | - | - |
| | | Typist | 2 | - | - |
| | | Technical Assistant | 2 | - | - |
| III | **Revenue** | Revenue Inspector | 1 | - | - |
| | | Revenue Assistants | 1 | - | - |
| IV | **Town Planning** | Town Planning Inspector | 1 | - | - |
| | | Typist | 1 | - | - |
| V | **Public Health** | SI | 1 | - | - |
| | | Typsit / SBM | 1 | - | - |
| VI | **Computer Room** | DEO | 1 | 1 | - |
| | | CFC Operators | 2 | - | - |
| | | Election | 1 | - | - |
| | | Oracale Server | 1 | - | - |
| | | **Total** | **21** | **2** | **3** |
| | | **Overall Total** | **26** | | |

**<u>பிரிண்டர்கள்</u>**

| Sl.No. | Section | Total No. of Printers |
|---|---|---|
| 1 | Laser Printer | 10 |
| 2 | Color Printer | 2 |
| 3 | Dot matrix printer | 2 |
| 4 | Xerox Machine | 1 |
| | | **15** |

**<u>General</u>**

1) 5 KVA UPS – 3 Nos (Computer Section, General Section and Engineering Section)
2) CCTV Camera – 3 Hard disk (Chairman Room, ME Room and General)
3) Intercom

**<u>Net working Items</u>**

1) Computer Room – 24 ports switches
2) Engineering Section – 8 port switches

எனவே மேற்கூரிய இனங்களில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகள் உடன் சரிபார்த்தல், மேற்படி உபகரணங்களில் ஏதேனும் பழுதடைந்தால், தேவையான உபகரணங்களை புதியதாக பொருத்துதல் மற்றும் அனைத்து கணினிகளுக்கும் Annual Maintenance Contract மூலம் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.5,00,000/- ஆகும். மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1206 / 2024 / இ1)**

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>தீர்மானம் எண் : 298 / 2024</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட அம்ரூத் **2.0** திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் பணிகளில் தேசிய நெடுஞ்சாலையில் குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் தற்சமயம் முடிவடைந்துள்ளது. மேலும் குடிநீர் பதித்த பகுதிகளில் மேடு பள்ளங்கள் அதிகமாகி பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் பாதிப்பு ஏற்படுவதால் அதனை உடனடியாக சரிசெய்வதற்கு புதியதாக தார்சாலைகள் அமைக்க ரூ.4,40,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1206 / 2024 / இ1)**

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>தீர்மானம் எண் : 299 / 2024</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19 சிவநாதபுரம் மற்றும் வார்டு எண்.**3** குமாரவலசு பகுதியில் பழுதடைந்த நிலையில் 16M High Mast Light அகற்றி புதியதாக அஸ்திவாரதளம் மற்றும் புதிய விளக்குகள் அமைப்பதற்கு ரூ.4.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1206 / 2024 / இ1)**

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>தீர்மானம் எண் : 300 / 2024</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வேலுச்சாமி நகர் பிரிவு, குமாரவலசு, சுபஸ்ரீ மஹால், உப்புப்பாளையம், டி.சி மெயின் ரோடு காவேரி நகர், எம்.ஜி.ஆர் நகர், கல்லுக்குட்டை மேடு, பத்திரப்பதிவு அலுவலகம் திருவள்ளுவர் நகர் மேற்படி பகுதிகளில் குடிநீர் விநியோகத்தின் போது குடிநீர் பகிர்மானக்குழாய்கள் அதிக அழுத்தம் மற்றும் போக்குவரத்தினால் உடைந்து பழுதுகள் ஏற்படுகிறது. எனவே உடனடியாக சரிசெய்யவும், மேலும் பணியானது பொதுமக்களின் தினசரி தேவையான குடிநீர் பணியாக இருப்பதாலும், அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு ரூ.3.75 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1206 / 2024 / இ1)**

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>தீர்மானம் எண் : 301 / 2024</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 21 வரையிலான அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்படி பணிகள் மேற்கொள்ளப்படும் போது பணிதளத்தில் குடிநீர் மெயின் குழாய்கள் மற்றும் பகிர்மான குழாய்கள் உடைப்பு ஏற்பட்டுள்ளது. அதனை சரி செய்ய ரூ.4.90 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1206 / 2024 / இ1)**

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>தீர்மானம் எண் : 302 / 2024</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உப்புப்பாளையம், டி.சி மெயின் ரோடு, கேபிசி நகர், மு.பழனிச்சாமி நகர், பாண்டியன் நகர் மேற்படி பகுதிகளில் குடிநீர் விநியோகத்தின் போது குடிநீர் பகிர்மானக்குழாய்கள் அதிக அழுத்தம் காரணமாகவும் மற்றும் போக்குவரத்தினால் உடைந்து பழுதுகள் ஏற்படுகிறது. எனவே உடனடியாக சரிசெய்யவும், மேலும் மேற்படி பணியானது பொதுமக்களின் தினசரி குடிநீர் தேவை பணியாக இருப்பதாலும், அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு ரூ.4.75 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1206 / 2024 / இ1)**

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>தீர்மானம் எண் : 303 / 2024</u>**

